# கிருபையுள்ள வார்த்தை ®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22


VOL - 27
ஆண்டு சந்தா ரூ. 100/-

மார்ச் - MARCH
தனிப் பிரதி ரூ. 10/-

2026
வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-






ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


ஆசிரியர் உரை 3

பெண்கள் பகுதி 7

வாலிபர் பகுதி 9

ஓராண்டில்... வேதவாசிப்பு
சிறுவர் பகுதி 11


*In Memory of J.C. CHOATE*


*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **Dr. P.C. PHILEMON RAJA**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா,** M.S. (IT&M)., M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
**E. ஜோசப் பிரதீப்,** B.Th., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா,** D.Th., **P. பெவர்லி லிடியா** B.B.A.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் **B.** கருப்பசாமி பாண்டியன் B.A., B.L.
அட்வகேட் **V.** சுப்பிரமணியன் M.A., B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7.00 மணி**

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3.30 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**இந்த மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்...**



மாதந்தோறும் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு அரிசி வழங்கப்படுகிறது.


**கிருபையுள்ள வார்த்தை**
திருமண உறவினை தெய்வீக நோக்கத்தை
நோக்கி வழிநடத்தும் வார்த்தை

YouTube
@graciouswordcoc



**World Literature Publication :** Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

ஆசிரியர் உரை

- P.C. பிலேமோன் ராஜா



# திருமணம் கனமுள்ளது

## MARRIAGE IS HONORABLE ONE

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், பரிசுத்த மீட்பர் இயேசுகிறித்துவின் இனிய பெயராலே, உங்களை வாழ்த்துவதில் உள்ளம் மகிழ்கின்றேன்.

பிரியமானவர்களே, மனுக்குலம் படைக்கபட்ட நாள் துவங்கி திருமணம் என்ற குடும்ப பந்தம் நீடிய காலங்களாக உள்ளது. அதனால் தான் திருமணம் என்ற பிணைப்பை ஆயிரம் காலத்து பயிர் என்பர். பைபிள் திருமணத்தினை கனத்திற்குரியது என்கின்றது (எபிரெயர் 13:4). அது ஏன் கனத்திற்குரியது? என்பதனை அறிவது அவசியம்.

### 1. கர்த்தரே திட்டமிட்டார்:

அதியாகமம் 2:18-20 "பின்பு, தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். தேவனாகிய கர்த்தர் வெளியின் சகல வித மிருகங்களையும், ஆகாயத்தின் சகல விதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார். அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று. அப்படியே ஆதாம் சகலவித நாட்டு மிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவித காட்டு மிருகங்களுக்கும் பேரிட்டான். ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை."

முதலாவதாக திருமணம் என்பது மனிதன் தனிமையாக இருப்பது நல்லது அல்ல என்று பரிசுத்த பிதா ஏற்படுத்திய ஒன்றாக உள்ளது. மனிதன் தனிமையாக இருப்பதனை தவிர, அவர் படைத்த எல்லாம் நன்றாக இருந்தது. அதனால் அவனுக்கு அவரே ஏற்ற துணையை உண்டாக்க திட்டமிட்டு உண்டாக்கினார். ஆகையால் திருமணம் கனத்திற்குரியது.

சத்துருவானவன் எப்பொழுதுமே கர்த்தருடைய திட்டத்தினை நடைபெறவிடாமல் தடுக்க முயற்சி செய்வான். அவனது முயற்சிகள் வாய்க்காது என்று தெரிந்தாலும் முயற்சித்துக்கொண்டே இருப்பான். அப்படி தான் திருமணத்தினை தோல்வியாக காண்பிக்க முயலுகின்றான். ஆயினும் மனுக்குலத்தின் வெற்றிக்கும், வளர்ச்சிக்கும் குடும்பங்களே உறுதுணையாக இருப்பதினை நாம் கண்கூடாக காண்கின்றோம். கர்த்தர் செய்ய நினைத்ததை (திட்டத்தினை) ஒருவராலும் தடுக்க முடியாது, அவைகள் நடந்தேதீரும் (யோபு 42:2).

### 2. கர்த்தரே நடத்தினார்:

ஆதியாகமம் 2:21-23 "அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான். அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார். அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள். இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்."

இரண்டாவதாக, இந்த உலகின் முதல் திருமணத்தினை, பரிசுத்த பிதாவே முன்னின்று நடத்தினபடியினால், திருமணம் என்பது கனத்திற்குரியதாக இருக்கின்றது. ஆகையால் தான், நம் முன்னோர்கள் திருமணம் சொர்க்கத்தில் நிச்சயக்கப்படுகின்றது என சொல்லுகின்றனர். கர்த்தரே முன்னின்று நடத்துகின்ற திருமணத்தினை, 'அவ்வளவு தான் முடிஞ்சது' 'கடைசியாக ஒருமுறை சிரிங்க' 'ஐயோ மாட்டிகிட்டான்' என நம்மை வைத்தே சத்துருவானவன் கேலி செய்ய வைக்கின்றான். இந்த நையாண்டியை நன்கு படித்தவர்களும், அறிவாளிகளும், மேதாவிகளும் தங்களது மேடை பேச்சில் செய்கின்றனர் என்பது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாக இருக்கின்றது.

### 3. கர்த்தரே சட்டமிட்டார்:

ஆதியாகமம் 2:23-25 "அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள். இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள்

என்றான். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும், வெட்கப்படாதிருந்தார்கள்."

மூன்றாவதாக, திருமண வாழ்விற்கான சட்டத்தினை (கட்டளைகளை) அவரே வகுத்து கொடுத்தார். ஆகையால் திருமணம் என்பது கனத்திற்குரியதாகும். அவர் கொடுத்த திருமணத்திற்கான சட்டத்தினை, நாம் அவர் நடத்திய முதல் திருமணத்திலே அறிய முடிகின்றது ஆகையால் கணவன் மனைவி இருவருமே அச்சட்டங்களுக்கு கீழ்படிய வேண்டும்.

இன்றைய நாட்களில் திருமணத்திற்காக கர்த்தர் விதித்த விதிகளை மானுடம் கடைபிடிப்பதில்லை. அதுவே திருமண வாழ்வில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றது. ஆதாம் ஏவாளிற்கு திருமணம் செய்து வைத்த கர்த்தர், அவர்களை ஏதேனில் விட்டுவிட்டு, விண்ணுலகம் சென்றார். அவர்கள் வழி தவறியபோது, கண்டிக்கவும் தண்டிக்கவும் வந்தார் (ஆதியாகமம் 3).

பெற்றோர்களே, பிள்ளைகள் திருமணத்தினை செய்து வைத்தால், அவர்கள் வாழ்வை, அவர்களை வாழ விடுங்கள். அவர்கள் தடுமாறினால் தடம் மாறாதிருக்க வசனத்தினை வைத்து கண்டிப்போம். மாறாக அவர்கள் வாழ்வில் நம் சொந்த அனுபங்களை ஆலோசனையாக திணித்து, அவர்களை திணரடிக்க வேண்டாம். ஏனெனில் கர்த்தருடைய வார்த்தையே போதுமானதாகும் (சங்கீதம் 119:97-100).

### 4. கர்த்தரே ஆசீர்வதித்தார்:

ஆதியாகமம் 1:26-28 "பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக. அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்."

நான்காவதாக, திருமண வாழ்வினை கர்த்தர் ஆசீர்வதித்தார். ஆதாம் (கணவன்), ஏவாள் (மனைவி) இணைந்து பலுகி பெருகும்படியாக ஆசீர்கூறி கட்டளையிட்டார். அதனால், திருமணம் என்பது ஆசீர்வாதமான ஒன்றாகும். ஆதாம் முதலில் படைக்கப்பட்டான், ஆயினும் ஏவாள் அவன் வாழ்வில் வந்து, திருமணத்தில் இணைக்கப்பட்ட போது தான், கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கின்றார்.

எந்த ஒரு ஆசீரும் குடும்ப தலைவன் வழியாக குடும்பத்திற்கு வந்து சேரும். எந்த இடத்திலேயும் கர்த்தர் மனிதனை தனியாக கணக்கிடவில்லை. ஆகான், கோராகு, தாத்தான், அபிராம் போன்றவர்கள் பாவம் செய்தபோது, குடும்பமாக தண்டிக்கபட்டனர். அதே போல நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தாவீது கர்த்தருக்கு கீழ்ப்படிந்ததினாலே குடும்பமாக ஆசீர் பெற்றனர். ஏனெனில் குடும்பத்தினை (திருமணத்தினை) கர்த்தர் ஆசீர்வதிக்கின்றார். நேரடியாக தனிமனிதனுக்கு சொல்லபட்ட ஆசீர்வாதத்தில் குடும்பமும் அடங்குகின்றது (சங்கீதம் 128) என்பதனை நினைவில் கொள்வோம்.

### 5. கர்த்தரே சாட்சியானார்:

மல்கியா 2:14,15 "ஏன் என்று கேட்கிறீர்கள்; கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார். உன் தோழியும் உன் உடன்படிக்கையின் மனைவியுமாகிய அவளுக்கு நீ துரோகம் பண்ணினாயே. அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே. பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே. ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்."

ஐந்தாவதாக, திருமண உறவில் இணைக்கப் படுகின்ற, கணவன் மனைவி என்ற தூய்மையான உறவிற்கு அவரே சாட்சியாக இருக்கின்றார். இன்றைய நாட்களில் அநேக உறவினர்கள் நண்பர்கள் சாட்சியாக இருப்பதினையும், கையொப்பம் இடுவதினையும் நாம் கவனித்திருப்போம். ஆயினும் அவர்கள் அனைவரைவிட உறுதியான சாட்சியாக கர்த்தர் இருக்கின்றார். ஆகையால் கணவன் மனைவி இருவருமே ஒருவருக்கொருவர் உண்மையாக வாழ வேண்டும்.

ஆதி நாட்களில் இருந்தே கர்த்தருடைய திட்டம் என்பது ஒருவனுக்கு ஒருத்தி என்பதுதான். ஆகையால் தான் அளவில்லா சர்வ வல்லமையுடைய அவர், ஒரு ஆதாம், ஒரு ஏவாளை படைத்தார். மனிதர்கள் அநேக உபாய தந்திரங்களை தேடி,ஒன்றுக்கு மேற்பட்ட நபரை மணக்கவும், அவர்களைவிட்டு பிரியவும் செய்தனர் (மத்தேயு 19:1-9). மனிதன் தேவ திட்டத்தினை மீறியதால் மிஞ்சியது குடும்பங்களில் கூச்சல், குழப்பம், வலிகள் மற்றும் மீளா துயரங்கள் தான். அப்படி செய்து, கனத்திற்குரிய திருமணத்தினை கனவீனப்படுத்திடக் கூடாது என்பதற்கு தான், கர்த்தரே திருமணத்திற்கு சாட்சியாக இருக்கின்றார்.

### 6. கர்த்தரே பரிசுத்தப்படுத்தினார்:

எபிரெயர் 13:4 "விவாகம் (திருமணம்) யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாத தாயுமிருப்பதாக. வேசிக்கள்ளரையும் விபசாரக் காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்."

ஆறாவதாக, திருமணத்தினை கனமுள்ளதாகவும், கணவன் மனைவிக்குமான உறவை பரிசுத்தமானதாகவும் கர்த்தரே பரிசுத்தப்படுத்தினார். ஆகையால் கணவன் மனைவி இருவருமே, உடல் சம்பந்தமான இச்சைகளுக்கு, ஒழுங்கீனங்களுக்கு இடமளிக்காமல், கர்த்தர் சொன்னபடியே ஒழுங்கும் கிரமுமாக நேர்மையுடன் வாழ வேண்டும்.

கணவன் மனைவிக்கும் இடையே நடைபெறும் தாம்பத்தியம் என்பது தூய்மையானதே. அவர்கள் பெற்றெடுக்கும் குழந்தைகளும் தூய்மையானதே. ஆகையால் தான் பைபிள் எந்த குழந்தையும் பாவத்தோடு பிறப்பதில்லை என்கின்றது. ஒருவர் பாவம் செய்வதினாலே தான் பாவியாகின்றார். மாறாக, பாவியாக பிறப்பது இல்லை. அவரவர் செய்த பாவங்கள் அவர்களையே சாரும் என்பதினால், முன்னோர்களின் பாவங்களையும் அவர்கள் சுமப்பதில்லை (எசேக்கியேல் 18:1-5, 1யோவான் 3:4). ஆகையால் தான் பரிசுத்த ஆண்டவர் இயேசு, சிறுபிள்ளைகள் பரலோக அரசிற்கு உரியவர்கள் என்றார் (மத்தேயு 19:14). தாம்பத்தியம் முறைதவறி நடக்கும் போது தான் அதன் தூய்மையை இழக்கின்றது. அதன் தூய்மையை இழக்க செய்வோர் தண்டிக்கப்படுவர் (எபிரெயர் 13:4).

### 7. கர்த்தர் திருமண முறிவை வெறுக்கின்றார்:

மல்கியா 2:16,17 "தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார். அப்படிப்பட்டவன் கொடுமையினால் தன் வஸ்திரத்தை மூடுகிறான் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆகையால் நீங்கள் துரோகம்பண்ணாமல் உங்கள் ஆவியைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். உங்கள் வார்த்தைகளினாலே கர்த்தரை வருத்தப்படுத்துகிறீர்கள். ஆனாலும் எதினாலே அவரை வருத்தப்படுத்துகிறோம் என்கிறீர்கள். பொல்லாப்பைச் செய்கிறவனெவனும் கர்த்தரின் பார்வைக்கு நல்லவன் என்றும், அப்படிப்பட்டவர்கள் பேரில் அவர் பிரியமாயிருக்கிறாரென்றும், நியாயந்தீர்க்கிற தேவன் எங்கேயென்றும், நீங்கள் சொல்லுகிறதினாலேயே"

ஏழாவதாக, கர்த்தர் திருமண முறிவை வெறுக்கின்றபடியினாலே, திருமணம் எவ்வளவு கனத்திற்குரியது என்பதனை நாம் அறிய முடிகின்றது. கர்த்தர் வெறுக்கின்ற இச்செயலை நாமும் வெறுக்க வேண்டும். கர்த்தர் வெறுக்கின்றபடியினால் திருமண முறிவு எவ்வளவு பாவம் என்பதனை நாம் உணர வேண்டும். இதனை யாரும் செய்ய கூடாது. யாரும் செய்வதற்கு நாம் எந்த வகையிலும் காரணமாகிவிடவும் கூடாது (மத்தேயு 19:1-6).

திருமண உறவை நேசிக்கின்ற கர்த்தர். திருமண முறிவை வெறுக்கின்றார். சுயத்தினை முன்னிறுத்தி மனிதர்கள், தெய்வீக திட்டத்தினை உடைக்கின்றனர். திருமண பதிவிற்கான அரசாங்கத்தினை அனுகுபவர்களைவிட, திருமண முறிவிற்காக நீதிமன்றத்தினை அனுகுவோர் அதிகமாகிவிட்டனர். விட்டுக்கொடுத்தல், மன்னித்தல், சகித்தல், சரிசெய்தல் என்ற அறம் நிறைந்த வாழ்வியல் எல்லாம் மறந்துவிடுகின்றனர். எந்த வழியில் வந்தாலும் திருமண முறிவு வெறுக்கத்தக்கதே என்பதனை நினைவில்கொள்வோம் (மல்கியா 2:16).

### 8. முறைதவறிய உறவுகளை ஒழிப்பதால்:

1 கொரிந்தியர் 7:2-4 "ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்கவேண்டும். புருஷன் தன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன். அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள். மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி. அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி."

எட்டாவதாக, திருமணம் என்பது விபச்சாரம்,

வேசித்தனம், காமவிகாரம் போன்ற பாவத்தினை தவிர்க்கவும், ஒழிக்கவும் உதவுவதால், கனத்திற்குரியதாக இருக்கின்றது. கணவன் சரீரம் மனைவிக்கும், மனைவியின் சரீரம் கணவனின் உடமையாக்கி, மனுக்குலம் தூய்மையாக வாழ வழிசெய்துள்ளது. ஆம், மனிதன் தனிமையாக வாழ்வது நல்லது அல்ல, ஏற்ற துணை தேவை.

கர்த்தர், ஆதாமிற்கு ஏற்ற துணையாக ஏவாளை தான் படைத்தார். இன்னொரு ஆதாமை படைக்க வில்லை. ஏவாளிற்கு இன்னொரு ஏவாளை படைக்கவில்லை. எந்த ஒரு விலங்கினமும்கூட ஆண் ஆணோடும், பெண் பெண்ணோடும் இணை சேர்வதில்லை. ஆறறிவு உள்ள மனிதன் தான், தனிமனித சுகந்திரம் என்ற பெயரில் விலங்குகளைவிட அசிங்கமான வாழ்வு முறையை வாழ்கின்றான் மற்றும் அதனை நியாயப் படுத்துகின்றான். இது மிகவும் அசிங்கமான பாவம் மற்றும் அவர்கள் மனந்திரும்பாத பட்சத்தில் நரக அக்கினியினால் தண்டிக்கப்படுவர் (1கொரி. 6:9,10; ரோமர் 1:26-28).

## 9. மறுமணத்தினை ஆதரிப்பதால்:

ரோமர் 7:1-3 "நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன். சகோதரரே, ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறதென்று அறியாமலிருக்கிறீர்களா? அதெப்படியென்றால், புருஷனையுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணத்தின் படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள். புருஷன் மரித்த பின்பு புருஷனைப்பற்றிய பிரமாணத்தினின்று விடுதலை யாயிருக்கிறாள். ஆகையால், புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம்பண்ணினால் விபசாரியென்னப்படுவாள். புருஷன் மரித்தபின்பு அவள் அந்தப் பிரமாணத்தினின்று விடுதலையானபடியால், வேறொரு புருஷனை விவாகம் பண்ணினாலும் விபசாரியல்ல."

ஒன்பதாவதாக, திருமணமான கணவன் மனைவி இருவரில் ஒருவர் இல்லையென்றால், அந்த நபர் தனித்து வாழ்வதனைவிட சமூதாயத்தில் மறுபடியும் திருமணம் செய்து வாழ வழி உண்டாக்கியதால், அது கனமுள்ளதாக இருக்கின்றது அவர்கள் கைம்பெண்ணாகவோ, ஒண்டியாகவோ வாழ்ந்து வேகின்றதை விட திருமணம் செய்யுங்கள் என்கின்றது.

அநேகர் மறுமணம் செய்துக்கொள்ளாமல் விரகதாபத்தினால் வெந்து, அதனை தீர்க்க தவறான பாதைகளுக்கு செல்லுகின்றனர். இன்னும் சிலர் திருமணம் செய்யாமல் சுயபுணர்ச்சிகளுக்கு அடிமையாகின்றனர். இவைகள் எல்லாம் கனத்திற்குரிய திருமண வாழ்வை கனவீனப் படுத்துவதாகும். உங்களால் உங்களை கட்டுப்படுத்த முடியவில்லை என்றால், திருமணம் செய்வதே உத்தமமாகும். மறுமணம் என்பதனையும் வசனத்தின்படியே செய்ய வேண்டும் (ரோமர் 7:2; 1தீமோத்தேயு 5:14; மத்தேயு 5:32).

## 10. மகிமையுள்ள சபையுடன் ஒப்பிடுவதால்:

எபேசியர் 5:22-24 "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையா யிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான், அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும்."

பத்தாவதாக, கணவன் மனைவி பந்த பிணைப்பை, பரிசுத்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிற்கும், அவருடைய மகிமையான சரீரமான சபையுடன் இணைத்து ஒப்பிடுவதால், திருமணம் கனமுள்ளது. எவ்வளவோ உறவுகள் இருந்தும், கர்த்தர் தனக்கும் சபைக்குமான உறவை ஒப்பிடுவதில் திருமண பந்தத்தின் மகிமையை நாம் அறியலாம் (எபேசியர் 5:21-33). பைபிள் கிறிஸ்துவை மணவாளனாகவும், சபையை மணவாட்டியாகவும் ஒப்பிட்டு பேசுகின்றது (மத்தேயு 25:1, 2கொரிந்தியர் 11:2). ஆகையால் திருமண உறவை நாம் மிகவும் கனமாக எண்ணி செயல்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

**இறுதியாக,** ஆணும் பெண்ணும் முறையான குடும்ப வாழ்வில் நுழைய வழிகோலும் வாசலாக திருமணம் இருக்கிறது. திருமணம் மூலமாக ஒரு ஆணும், பெண்ணும் வெளிப்படையாக, சட்டப்பூர்வமான மற்றும் நிரந்தரமான திருமண உறவில் இணைகின்றனர். இந்த திருமண உறவு அவ்விருவரையும் மரணம் மட்டும் ஒன்றாக வாழ்வதற்கு ஏதுவாக இணைக்கிறது. திருமணம் என்பது குழந்தைகளைப் பெற்று அவர்களை ஒன்றாக வளர்ப்பதன் மூலமாக ஒரு ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் நிரந்தரமான அர்ப்பணிப்புடன் இணைய உதவுகின்றது. இத்தகைய கனத்திற்குரிய திருமணத்தினை நாமும் மதித்து, அதனை உண்டாக்கிய கர்த்தரை மகிமைப்படுத்துவோம்.

– அன்புடன், ஆசிரியர்

# விசுவாசத்தின் பயணம்

பிரியமானவர்களே ஆண்டவர் இயேசு ராஜாவின் பெயரில் வாழ்த்துக்கள்! ஜெபங்கள்!

அன்புள்ளம் கொண்டவர்களே இந்த மாதத்திலும் கூட நாம் வேதத்தில் மிகவும் துணிச்சலான முடிவை தன் வாழ்நாளில் எடுத்த பெண்ணை குறித்து பார்க்க இருக்கிறோம்.

அநேக வேளையில் நாம் நம் வாழ்வில் முடிவுகள், தீர்மானங்கள் எடுக்க, நம் வாழ்வை அடுத்த கட்டத்திற்கு எடுத்த செல்ல வேண்டிய சூழ்நிலையில் என்ன செய்வது என்று பயத்தோடும், கலக்கத்தோடும் இருக்கலாம். ஆனால் இந்த மாதம் நாம் தெரிந்துக் கொண்ட நபரை பற்றி பார்க்கும் போது அவள் வாழ வந்த குடும்பம் யாரை நம்பி வாழ்ந்தது என்பதை மிகவும் தெளிவாக புரிந்து இருந்ததினாலே மீண்டும் தன்னுடைய தேசத்திற்கு அவள் திரும்பி போவதை விரும்பவில்லை இஸ்ரவேலின் தேவன் அவளுக்கு துணையாக இருப்பார் என்று விசுவாசித்தாள். அதனால் தன்னுடைய மாமியோடே தன் வாழ்க்கையை தொடர்ந்தாள் தன்னுடைய நம்பிக்கையும் துணிச்சலையும் அவள் அறிக்கையிட்டாள் நாம் வசனங்கள் மூலமாக அவளுடைய விசுவாச பயணத்தை குறித்து நாம் தெரிந்து கொள்வோம்

ரூத் 1:16 நாம் வாசிக்கும்போது "உமது ஜனங்கள் என் ஜனங்கள்; உமது தேவன் என் தேவன்."

### அறிமுகம்:

வாழ்க்கை ஒரு பயணம். அந்தப் பயணத்தில் சிலர் வசதியைத் தேர்வு செய்கிறார்கள்; சிலர் விசுவாசத்தைத் தேர்வு செய்கிறார்கள். மோவாபிய பெண்ணான ரூத், மனித கணக்கில் எதுவும் இல்லாத நிலையிலும், தேவனைத் தேர்ந்தெடுத்தாள். அவளின் வாழ்க்கை நம்பிக்கை, விசுவாசம், அர்ப்பணிப்பு ஆகியவற்றின் உயிருள்ள சாட்சியாக இருக்கிறது.

### 1. நம்பிக்கையின் தீர்மானம்:

நகோமி எல்லாவற்றையும் இழந்து பெத்லகேமுக்கு திரும்ப முடிவு செய்தபோது, ரூத் தன் எதிர்காலம் உறுதியில்லாத நிலையில் இருந்தாள். மோவாபில் தங்கியிருந்தால் பாதுகாப்பு இருந்திருக்கலாம். ஆனால் ரூத் வசதியை அல்ல, உறவைத் தேர்ந்தெடுத்தாள்.

ரூத் 1:16 "நீர் போகும் இடத்துக்கு நான் வருவேன்." இது சாதாரண வார்த்தை அல்ல; இது முழுமையான அர்ப்பணிப்பு.

இன்றைய பெண்களாகிய நாமும் பல தீர்மானங்களின் முன் நிற்கிறோம். உலகம் எளிதான பாதையை காட்டும்; ஆனால் விசுவாசம் தேவன் காட்டும் பாதையைத் தேர்வு செய்கிறது.

### 2. விசுவாசத்தின் பணிவு:

பெத்லகேமில் வந்தபின் ரூத் வயலில் சேகரிக்கும் பணியில் இறங்கினாள். ராஜகுமாரியாக அல்ல, வேலைக்காரியாக தாழ்மையுடன் உழைத்தாள்.

ரூத் 2:12 "கர்த்தர் உன் கிரியைக்கு பிரதிபலன் அளிப்பாராக." அவள் செய்த சிறிய செயலும் தேவனின் கண்களில் பெரியதாக இருந்தது.

பெண்களே, நாம் செய்வது யாருக்கும் தெரியாமல் இருக்கலாம். ஆனால் தேவன் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

### 3. அர்ப்பணிப்பின் பலன்:

ரூத்தின் விசுவாசம் வெறுமனே உணர்ச்சி அல்ல; அது செயலில் வெளிப்பட்டது. அதன் முடிவில் தேவன் அவளை போவாஸ் உடன் இணைத்தார்.

ரூத் 4:17 – ரூத் தாவீதின் மூதாதையாக ஆனாள்.

(தொடர்ச்சி... 8ம் பக்கம்)

## அறிந்து கொள்வோம்

## மாதம் ஒரு "பூ"

## அடும்பு

அடும்பு அல்லது அடம்பு என்பது ஒருவகையான படரும் கொடி ஆகும். இது கடற்கரையிலும் வறண்ட மணல் மேட்டிலும் படர்ந்து வளரும். சங்க இலக்கியங்களின் பல பாடல்களில் நெய்தல் நிலத்திலே விளைவதை குறித்துள்ளனர். நற்றிணை என்னும் நூலில் (பாடல் 254ல்) 'குன்றோங்கு வெண்மணல் கொடியடும்பு கொய்தும்' என்று குறிப்பிடப்படுகின்றது. இதன் இலை ஆட்டுக்காலின் குளம்படி போலும் கவைத்து (இரு கிளையாக) உள்ளதைப் பற்றி தமிழ் இலக்கியங்கள் கூறுவதைப்போலவே அறிவியலிலும் குறிக்கப்பட்டுள்ளது. இக்கொடியின் மலர் செந்நீல நிறத்தில் பெரியதாக இருக்கும். இச்செடி இருவிதை நிலைத்திணை வகையைச் சேர்ந்தது.



கடற்கரை, ஆற்றங்கரை ஓரங்களில் வளரக்கூடியது அடம்பு. பல்வேறு நன்மைகளைக் கொண்ட இது படர்ந்து கொடியாக இருக்கும். இதற்கு ஆட்டுக்கால் அடம்பு என்ற பெயரும் உண்டு. அடம்பின் இலைகள் ஆட்டுக்கால் போன்ற தோற்றம் கொண்டது. இலைகள் கடினமாகவும் பூக்கள் நீல நிறத்திலும் காணப்படும். அரிய வகை மருத்துவ மூலிகையானது வயிற்றுப்போக்கை நிறுத்தக்கூடியது. மலச்சிக்கலைப் போக்கும். சிறுநீரை பெருக்கும் தன்மை உடையது.

ஒரு வெளிநாட்டு விதவை, ராஜவம்சத்தின் ஒரு பகுதியாக ஆனாள்!

அவளின் விசுவாசப் பயணம், இயேசு கிறிஸ்துவின் வம்ச வரிசையில் இடம் பெற்றது (மத்தேயு 1:5).

### 4. ரூத் நமக்கு சொல்லும் செய்தி:

விசுவாசம் என்பது சூழ்நிலை நன்றாயிருக்கும்போது மட்டும் அல்ல. அர்ப்பணிப்பு என்பது நிச்சயமில்லாத காலத்திலும் தேவனைப் பற்றிக்கொள்வது.

தேவன் நம்மை எங்கே வைத்தாலும், விசுவாசமாக இருந்தால் அவர் உயர்த்துவார்.

எபிரெயர் 11:6 – விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்துவது முடியாது.

### முடிவு:

ரூத்தின் வாழ்க்கை ஒரு பெண்ணின் அமைதியான விசுவாசம் தலைமுறைகளை மாற்ற முடியும் என்பதைக் காட்டுகிறது. இன்று நம்முடைய சிறிய அர்ப்பணிப்பு, நாளைய பெரிய ஆசீர்வாதத்தின் விதையாக இருக்கலாம்.

பெண்களே,

விசுவாசத்தின் பாதை சில நேரங்களில் கடினமாக இருக்கலாம். ஆனால் அந்தப் பாதையின் முடிவில் தேவனின் மகிமை காத்திருக்கிறது.

உமது தேவன் என் தேவன் என்று சொல்லத் துணிந்த ரூத் போல, நாமும் முழு மனதுடன் தேவனைத் தேர்ந்தெடுக்கிறோமா?

நாமும் நம்முடைய வாழ்விலே தேவனுடைய திட்டத்திற்கு உள்ளாக இணைக்கப்படுவதற்கு ஏற்ற தான முடிவுகளை நம் வாழ்வில் எடுக்கின்றோமா? அல்லது நம்முடைய முடிவு நம்முடைய முடிவு நம் சுயத்தை சார்ந்த முடிவாக இருக்கிறதா?

ஏனென்றால், இந்த உலகம் நமக்கு நிரந்தரம் அல்ல. நாம் காணாமல் இருக்கிற பரலோகத்தை அடைவதற்கு நம்மை நாமே ஆயத்தப்படுத்துவோம்! கர்த்தரின் கிருபையோடு, அடுத்த இதழில் சந்திப்போம்!

சகோதரி. **பெவர்லி கிங்ஸ்லி**

## சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, அரசரடி கிறிஸ்துவின் சபை நடத்திய, பெண்களுக்கான வேதாகம கருத்தரங்கில் செய்தியளித்த சகோதரிகளுடன் நமது ஆசிரியர்














# மதிப்புமிக்க முத்து

**மத்தேயு 13:45,46**

பிரியமான வாலிபர்களே! உங்கள் அனைவரையும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன். ஆண்டவர் இயேசுவின் உவமைகளைப் படித்துக் கொண்டு வருகிறோம். அந்த வரிசையில் இம்மாதமும் ஒரு உவமையை நாம் படிப்போம்.

மத்தேயு 13:45,46 வசனங்களில் பரலோக ராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது.

பரலோக ராஜ்யம் என்பது சபைக்கு ஒப்பிடப் படுகின்றது. நல்ல முத்துக்களைத் தேடுகின்ற வியாபாரியாக பரலோக பிதாவாகிய கடவுள் இருக்கின்றார். விலையுயர்ந்த முத்து என்பது உலக மக்களாயிருக்கிறது. பரம கடவுளாகிய யெகோவா தேவன், விலையுயர்ந்த முத்தாகிய (பாவிகளாகிய) நம்மீது அவர் கொண்ட மாபெரும் இரக்கமும், அன்பும் தான், அவர் தன்னுடைய சொந்தக்குமாரனை (தனக்கு உண்டான எல்லாம்) கொடுத்து (இரத்தம்) விலையுயர்ந்த முத்தாகிய சபையை வாங்குவதற்கு காரணம் (அப். 20:28).

பாருங்கள் வாலிபர்களே! பரலோகப் பிதாவின் அன்பு எவ்வளவு பெரிதாய் இருக்கின்றது (யோவான் 3:16). சபை என்கின்ற விலையேறப் பெற்ற முத்தை நமக்கு பெற்றுக் கொடுக்க தமது சொந்த குமாரனையே நமக்கு கொடுத்திருக்கின்றார். நாமனைவரும் கடவுளுடைய பார்வையில் மதிப்புமிக்கவர்களாக இருக்கின்றோம் (ரோமர் 3:23). பாவநிலையில், பரிதாபத்திற்குரிய முறையில் நம் வாழ்வு இருந்தாலும், மற்றவர்கள் நம்மை ஒடுக்கினாலும், உலகம் தாழ்வுப்படுத்தினாலும், நெருக்கப்பட்டாலும் இன்னும் நாம் கடவுளுடைய பார்வையில் மதிப்புமிக்க முத்துக்களே! (1 யோவான் 4:19).



எனக்கன்பான வாலிபர்களே! பரம கடவுளின் அன்பை புரிந்து அவர் எவ்வளவாய் செயல்பட்டிருக் கிறார் என்பதை உவமை மூலம் படித்து புரிந்து கொண்டோம். அவருடைய அன்பிற்கு பதிலாக என்ன செய்யப்போகின்றோம்? மெய்யான சபையைப் பற்றி கேட்டு அறிந்து கொள்வோம். விலையேறப்பெற்ற முத்தாகிய நாம் மதிப்பை உணர்ந்து, பரலோக கடவுளுக்கு பிரியமாய் வாழ்வோம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

– உங்கள் அண்ணன் **JP**

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. எலியா சாறிபாத் விதவையிடம் என்ன கேட்டார்?
2. சாறிபாத் விதவையின் வீட்டில் நடந்த அற்புதம் என்ன?
3. அகசியா ராஜா எத்தனை வருடம் ஆட்சி செய்தார்?
4. யோசேப்பு அண்ணா தீமையான காரியங்களுக்கு விலகி ஓடும்போது, அவர் சொன்ன சொல் என்ன?
5. கடல் கொந்தளிப்பு அமைதியாக மாலுமிகள் செய்தது என்ன? ஏன் கடல் கொந்தளித்தது?


## வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/–
Ph.No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

## பொதுவான செய்திகள் தமிழ்நாடு சந்தித்த சட்டசபை தேர்தல்கள்

தமிழ்நாட்டில் முதலாவது சட்டசபை தேர்தல் 1952-ம் ஆண்டு ஜனவரி 2, 5, 8, 9, 11, 12, 16, 21 மற்றும் 25 ஆகிய 9 நாட்கள் நடைபெற்றது.

2-வது சட்டசபை தேர்தல் 1957-ம் ஆண்டு மார்ச் 1, 4, 6, 8 மற்றும் 11 ஆகிய 5 நாட்கள் நடைபெற்றது.

3-வது சட்டசபை தேர்தல் 1962-ம் ஆண்டு பிப்ரவரி 17, 19, 21 மற்றும் 24 ஆகிய 4 நாட்கள் நடைபெற்றது.

4-வது சட்டசபை தேர்தல் 1967-ம் ஆண்டு பிப்ரவரி 5, 18 மற்றும் 21 ஆகிய 3 நாட்கள் நடைபெற்றது.

5-வது சட்டசபை தேர்தல் 1971-ம் ஆண்டு மார்ச் 1, 4 மற்றும் 7 ஆகிய 3 நாட்கள் நடை பெற்றது.

6-வது சட்டசபை தேர்தல் 1977-ம் ஆண்டு ஜுன் 12.14 ஆகிய 2 நாட்கள் நடைபெற்றது.

7-வது சட்டசபை தேர்தல் 1980-ம் ஆண்டு மே 28, 31 ஆகிய 2 நாட்கள் நடைபெற்றது.

8-வது சட்டசபை நேர்நல் 1984-ம் ஆண்டு டிசம்பர் 24-ந் தேதி ஒரேகட்டமாக நடைபெற்றது.

9-வது சட்டசபை தேர்தல் 1999-ம் ஆண்டு ஜனவரி21-ந்தேதி நடைபெற்றது.

10-வது சட்டசபை தேர்தல் 1991-ம் ஆண்டு ஜுன் 15-ந் தேதி (ஒரு நாள் மட்டும்) நடைபெற்றது.

11-வது சட்டசபை தேர்தல் 1996-ம் ஆண்டு ஏப்ரல் 27 மற்றும் மே 2 ஆகிய 2 நாட்கள் நடைபெற்றது.

12-வது சட்டசபை தேர்தல் 2001-ம் ஆண்டு மே 10-ந் தேதி ஒரே கட்டமாக நடைபெற்றது.

13-வது சட்டசபை தேர்தல் 2006-ம் ஆண்டு மே 8-ந் தேதி ஒரேகட்டமாக நடத்தப்பட்டது.

14-வது சட்டசபை தேர்தல் 2011-ம் ஆண்டு ஏப்ரல் 13-ந் தேதி (ஒரு நாள் மட்டும்) நடைபெற்றது.

15-வது சட்டசபை தேர்தல் 2016-ம் ஆண்டு மே 16-ந் தேதி நடைபெற்றது.

16-வது சட்டசபை தேர்தல் 2021-ம் ஆண்டு ஏப்ரல் 6-ந் தேதி ஒரேகட்டமாக நடத்தப்பட்டது

## Gospel Through Media by Evangelism Team

**Philemon & Kingsly in Tamil:** **Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am.
**Nambikkai TV:** Sunday 3:30 - 4:00 pm.

**Rajanayagam & Benny Martin in Tamil:** **Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am & Friday 7:30 - 8:00 am

**Arjunan in Tamil:** Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

**Hindi TV program: Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

**P. K. Varghese in Malayalam:** Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**

Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**

Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

**Amul Bansod – Aurangabad (Marathi)**

**MCN News** channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

# ஓராண்டில் திருமறையை வாசித்து முடிக்க....



## ஏப்ரல்

| காலை | லூக்கா | மாலை — நியாயாதிபதிகள் |
|---|---|---|
| 1. | 6:27-49 | 13-15 |
| 2. | 7:1-30 | 16-18 |
| 3. | 7:31-50 | 19-21 |
| 4. | 8:1-25 | ரூத் புத்தகம் (முழு) |
| | | **1 சாமுவேல்** |
| 5. | 8:26-56 | 1-3 |
| 6. | 9:1-17 | 4-6 |
| 7. | 9:18-36 | 7-9 |
| 8. | 9:37-62 | 10-12 |
| 9. | 10:1-24 | 13,14 |
| 10. | 10:25-42 | 15,16 |
| 11. | 11:1-28 | 17,18 |
| 12. | 11:29-54 | 19-21 |
| 13. | 12:1-34 | 22-24 |
| 14. | 12:35-59 | 25,26 |
| 15. | 13:1-22 | 27-29 |
| 16. | 13:23-35 | 30,31 |

| காலை | | மாலை — 2 சாமுவேல் |
|---|---|---|
| 17. | 14:1-24 | 1,2 |
| 18. | 14:25-35 | 3-5 |
| 19. | 15:1-10 | 6-8 |
| 20. | 15:11-32 | 9-11 |
| 21. | 16 | 12,13 |
| 22. | 17:1-19 | 14,15 |
| 23. | 17:20-37 | 16-18 |
| 24. | 18:1-23 | 19,20 |
| 25. | 18:24-43 | 21,22 |
| 26. | 19:1-27 | 23,24 |
| | | **1 இராஜாக்கள்** |
| 27. | 19:28-48 | 1,2 |
| 28. | 20:1-26 | 3-5 |
| 29. | 20:27-47 | 6,7 |
| 30. | 21:1-19 | 8,9 |

★ கொடுக்கப்பட்டுள்ள வேதாகம பகுதிகளை வாசித்து முடித்தவுடன் அருகில் உள்ள கட்டத்தில் ☑ செய்யவும்..

**வேதாகமத்தை முறையாக கற்றுக்கொள்ள: 92 4421 4421, 92 4431 4431**

அடுத்த இதழில்...

சிறுவர் பகுதி

## சாறிபாத் விதவை

ஹாய் குட்டீஸ்! எப்படியிருக்கிறீர்கள்? கர்த்தரின் கிருபையினால் நலமாயிருப்பீர்கள் என்று நம்புகிறேன். பிள்ளைகளா! இந்த மாதமும் உங்களோடு ஒரு வேதாகம சம்பவத்தை பகிர்ந்து கொள்வதில் அளவில்லா மகிழ்ச்சியடைகிறேன்... அவை 1 இராஜாக்கள் 17: 8-16 ல் உள்ளவை.

தீர்க்கதரிசியாகிய எலியாவின் காலத்தில் இஸ்ரயேல் தேசத்தில் மழையில்லாததால் கடும் வறட்சி நிலவியது. அப்போது கடவுள் எலியாவை நோக்கி, “நீ சீதோன் நாட்டுச் சாறிபாத் ஊருக்குப் போ; அங்கே உன்னைப் பராமரிக்கும்படி ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன்” என்று கூறினார்.



எலியா அந்த ஊருக்குச் சென்றபோது, ஒரு விதவை விறகு பொறுக்கிக் கொண்டிருந்தாள். எலியா அவளிடம்

குடிக்கக் கொஞ்சம் தண்ணீரும், சாப்பிட ஒரு துண்டு அப்பமும் கேட்டார்.

அப்பொழுது அந்தப் பெண் அவரிடம், "என்னிடம் சுடப்பட்ட அப்பம் ஏதுமில்லை; பானையில் ஒரு பிடி மாவும், கலயத்தில் கொஞ்சம் எண்ணெயும் மட்டுமே உள்ளது. நானும், என் மகனும் இதைச் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு, செத்துப் போகலாம் என்று இருக்கிறேன்" என்று தன் வறுமையை விவரித்தாள்.

அப்பொழுது எலியா அவளிடம் பயப்பட வேண்டாம் என்றும், முதலில் தனக்கு ஒரு சிறிய அப்பத்தைச் சுட்டு எடுத்து வரும்படியும், அதன் பிறகு அவளுக்கும் அவள் மகனுக்கும் செய்துகொள்ளலாம் என்றும், "தேசத்தில் மழை பெய்யும் வரை உன் பானையில் மாவு குறையாது, கலயத்து எண்ணெய் வற்றாது" என்ற கர்த்தருடைய வார்த்தையை அவளிடம் கூறினார்.

அந்தப் பெண் தான் மரணத்திற்குத் தயாராக இருந்த நிலையிலும், எலியாவின் வார்த்தையை (கர்த்தர் சொன்ன வார்த்தையை) நம்பி, அவனுக்கு உணவளித்தாள். அப்பொழுது சொன்னபடியே, பஞ்சம் தீரும் வரை அவளுடைய வீட்டில் உணவுக்குக் குறைவே ஏற்படவில்லை. அவள் வறுமையிலும், கர்த்தர்மீது கொண்ட நம்பிக்கையால் அற்புதப் பராமரிப்பைப் பெற்றாள்.

குட்டீஸ்! இந்த சம்பவத்திலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்? முதலாவதாக, அந்த பெண் தன்னிடம் மிகக் குறைவாக இருந்தபோதும், கடவுளுடைய ஊழியருக்கு முன்னுரிமை அளித்து, அவள் தனது தாராள குணத்தை வெளிப்படுத்தினாள்.

இரண்டாவதாக, கர்த்தரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, தனக்கும், தனது பிள்ளைக்கும் இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்று கருதி, அவருடைய வார்த்தையை நம்பிச் செயல்பட்டாள்.

கடைசியாக, பாடுகள், இக்கட்டான சூழ்நிலைகளில் தங்களை நம்புவோரை கடவுள் கைவிடுவதில்லை என்ற உறுதி அவளுக்கு இருந்தது. எனவே, அந்த பஞ்சத்திலிருந்து அவளும், அவளது மகனும் காப்பாற்றப் பட்டனர்.

இந்த மூன்று காரியங்களையும் நீங்களும் ஞாபகம் வைத்து, எப்போதும் கடவுளின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவருக்கு முதலிடம் கொடுத்து நம்பிக்கையாயிருக்கும் போது சகல நன்மைகளையும் கர்த்தர் உங்களுக்கு தருவார். ஆமென். அடுத்த இதழில் சந்திப்போமா!

**மனப்பாட வசனம்: சங்கீதம் 57:2**

"எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற தேவனாகிய உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பிடுவேன்."

– சகோ. ஜான் செல்லையா

# அகசியா ராஜாவின் ஆட்சி

(2நாளாகமம் 22-24ம் அதிகாரங்கள் வரை)

கடவுளுக்கு பிரியமான செல்லங்களா நீங்கள் எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள்? நல்லாயிருக்கிறீர்களா? போன மாதம் எலிசாவின் அற்புதம் மற்றும் மரணம் என்ற தலைப்பில் இந்த பத்திரிகையில் படித்தீர்களா? சிறுவர்களுக்கான கேள்வி பதில் எழுதி அனுப்புகிறீர்களா? நல்ல பிள்ளைகள் நீங்கள். ஏன்? தெரியுமா? சிறுவர் பகுதி படிக்கிறீர்கள், சிறுவர்களுக்கான கேள்வி பதில் எழுதி அனுப்புகிறீர்கள். அப்ப நீங்கள் நல்ல பிள்ளைகள் தானே!

இப்பக் கூட அகசியா இராஜாவைப் பற்றி படிக்கலாமா?



இராஜா அகசியாவின் பைபிள் சம்பவம் (குட்டி பிள்ளைகளாகிய உங்களுக்காக)

முன்பொரு காலத்தில், அகசியா என்ற ஒரு ராஜா இருந்தார், அவர் ஒரு பெரிய நாட்டுக்குத் தலைவர் ஆனார். ஆனால் அவர் செய்த சில தவறுகளால் அவரது ஆட்சி சீக்கிரமே முடிந்து போனது. இவருக்கு 22 வயது.

ஒருவருஷம்தான் ஆட்சி செய்தார். ஏன் தெரியுமா?

**1. அம்மா பேச்சு:**

அகசியாவுக்கு அவருடைய அம்மா என்றால் ரொம்ப பிடிக்கும். ஆனால் அவருடைய அம்மா அத்தாலியா, அவருக்கு நல்லவைகளை சொல்லிக் கொடுக்க வில்லை. நீ பொய் சொல்லு, சண்டை போடு, கடவுளுக்குப் கீழ்படியாதே, யாராவது அடித்தால் திரும்பி அடி, சர்ச்சுக்கு போகாதே, ஊழியக்காரர்கள் சொல்வதை கேட்காதே என்று தவறான வழியை காட்டினாங்க. அகசியாவும் யோசிக்காமல் அம்மா சொன்ன கெட்ட விஷயங்களை அப்படியே செய்தான்.

### 2. தவறான நண்பர்கள்:

அகசியாவுக்கு சில நண்பர்கள் இருந்தார்கள். அவர்கள் எப்போதுமே சண்டைப்போடுவார்கள் அகசியாவும் அவர்களோடு சேர்ந்து தேவையில்லாத சண்டைக்குப் போனான். இறுதியில் அந்தப் பழக்கம் அவனுக்குப் பெரிய ஆபத்தாக முடிந்தது.

### குட்டிப்பிள்ளைகளுக்கு என்னப் பாடம்?

குட்டிச் செல்லங்களா, இந்த பைபிள் சம்பவத்திலிருந்து நாம் 2 பாடங்களை ஞாபகம் வைத்துக்கொள்ளலாம்.

### 1. நல்லதையே கேட்கணும்:

யாராவது நமக்குத் தவறான காரியங்களைச் செய்யச் சொன்னால் (உதாரணத்திற்கு:அம்மாவுக்கு தெரியாமல் சாக்லேட் எடு அல்லது பொய் சொல்லு, பள்ளிக்கூடம் போகாமல் இரு, சர்ச்சுக்கு போகாமல் இரு) இதை நாம் செய்யக் கூடாது. எது சரி என்று நமக்குத் தெரியுமோ, அதைத்தான் செய்ய வேண்டும்.

### 2. நல்ல நண்பர்கள்:

நம்மிடம் இருக்கும் நல்ல விஷயங்களைச் சொல்லித் தரும் நண்பர்களோடு மட்டும் விளையாட வேண்டும். அவர்கள் சொல்வதை கேட்க வேண்டும்.

பிள்ளைகளா! உங்களுக்கு ஒரு குட்டி (Activity)

யார் சரியாக சொல்வீர்கள் என்று பார்க்கலாம்?

யாராவது உங்களை தப்பு செய்யச் சொன்னால் நீங்கள் அதை செய்வீர்களா? அல்லது கடவுளுக்குப் பிடித்த மாதிரி நல்ல பிள்ளைகளாக இருப்பீர்களா?

**மனப்பாட வசனம்: நீதிமொழிகள் 13:20**

"ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான். மூடருக்குத் தோழனோ நாசமடைவான்."

— சகோ. அன்பு ஏசுதாஸ்

### சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | D. டே∴ப்னி | சென்னை |
| 2. | D. ஜுனித்தா | சென்னை |
| 3. | A. ஹானா ஜோதிராணி | மதுரை |
| 4. | A. சுபிக்ஷா | பெருமாள் வலசு |
| 5. | M. ஜோனத்தான் | கரூர் |
| 6. | A. சாம் குமார் | பெருமாள் வலசு |
| 7. | S. ஜோசுவா | ராணிபேட்டை |
| 8. | A. ஆடின் ∴பேபியோ | ராணிபேட்டை |
| 9. | A. ஆலன் காலேப் | ராணிபேட்டை |
| 10. | S. ஜுடித் ஆராதனா | ராணிபேட்டை |
| 11. | V. ஏஞ்சல் ஜோயன்னா | மதுரை |
| 12. | M. அபி பிலேமோன் | எழுகம்வலசு |
| 13. | J. நவீன் பீட்டர் | மதுரை |
| 14. | J. கிறிஸ்டினா ஜாய்ஸ் | மதுரை |
| 15. | S. ஜுடா லியோ | ரஸ்தா |
| 16. | G. ஜெர்லின் | ரஸ்தா |

# யோசேப்பு சிறையில் வைக்கப்படுதல்

எனக்கு அன்பான செல்ல குட்டிகளே! பரலோக பரிசுத்த கடவுளின் அன்பும், கருணையும், பாசமும் உங்களோடு இருப்பதாக. கடந்த மாதம் யோசேப்பு அண்ணாவின் வாழ்க்கையில் இருந்து ஆவிக்குரிய படங்களை கற்றுக் கொண்டீர்கள் என்பதை நம்புகிறேன். அதன் தொடர்ச்சியாக இந்த மாதமும் யோசேப்பு அண்ணாவின் வாழ்க்கையில் இருந்து சில படங்களை கற்றுக் கொள்வோம். ஆதியாகமம் 39 ஆம் அதிகாரத்தில் நடந்த நிகழ்வுகளை படிப்போம்.



கானான் நாட்டிற்கு அருகாமையில் எகிப்து என்னும் நாடு இருந்தது. சில மனிதர்கள் யோசேப்பு அண்ணாவை விலைக்கு வாங்கி எகிப்து என்னும் நாட்டிலே விற்று விட்டார்கள். அந்த சமயத்தில் பார்வோன் என்னும் அரசன் எகிப்து நாட்டை ஆண்டு கொண்டு வந்தான். அந்த அரசனிடம் போத்திபார் என்னும் அதிகாரி ஒருவன் இருந்தான். அவன் வீட்டில்தான் யோசேப்பு அண்ணா வேலை செய்து கொண்டு வந்தார். யோசேப்பு அண்ணா உங்களைப்போல மிகவும் அழகுள்ளவரும், காரியசித்தி உள்ளவருமாய் இருந்தார். போத்திபார் அதிகாரி தன் வீட்டில் உள்ள எல்லாவற்றிற்கும் அதிகாரியாக யோசேப்பு அண்ணாவை உயர்த்தி வைத்திருந்தார்.

ஒருநாள் போத்திபார் அதிகாரி வெளியே அரச வேலைக்காக சென்றிருந்தார். அந்த சமயத்தில் யோசேப்பு அண்ணா தனியாக வீட்டில் வேலை செய்து கொண்டு இருந்தார். வீட்டில் யாரும் இல்லாத நேரமாக இருந்தது. அந்த சமயத்தில் சிலர் யோசேப்பு அண்ணாவிடம் வந்து தீமையான காரியங்களை செய்யும்படி அழைத்தார்கள்.

யோசேப்பு அண்ணாவோ அந்த தீமையான காரியங் களுக்கு உடன்படாமல், அவர்களைப் பார்த்து சொன்னார். என் எஜமான் என்னைக் குறித்து யாதொன்றையும் விசாரிக்காமல் தனக்கு உண்டான எல்லாவற்றையும் என் கையில் ஒப்புவித்திருக்கிறார். இந்த வீட்டில் என்னைவிட பெரியவன் ஒருவனும் இல்லை. இப்படி இருக்கிறபடியால்

நான் இப்படிப்பட்ட தீமையான காரியங்களுக்கு உடன்பட்டு, கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்வது எப்படி என்றான். அந்த சமயத்தில் தீமைக்கு உடன்படாமல் வீட்டிற்கு வெளியே ஓடிவிட்டான். இதை நிமித்தம் சில மனிதர்கள் யோசேப்பு அண்ணாவை சிறைச்சாலையில் போட வேண்டும் என்று ஆலோசனை பண்ணினார்கள்.

அந்த சமயத்தில் போத்திபார் அதிகாரி வீட்டிற்கு வந்தான். அவனிடம் யோசேப்பு அண்ணாவை குறித்து தவறான முறையில் பேசினார்கள். உடனே போத்திபார் அதிகாரிக்கு கோபம் வந்து யோசேப்பு அண்ணாவை சிறைச்சாலையில் போட்டு விட்டான். ஆனால் சர்வ வல்லமையுள்ள கர்த்தர் யோசேப்பு அண்ணாவை விடுதலை செய்தார்.

கர்த்தருக்கு பிரியமான அன்புச் செல்லங்களே! யோசேப்பு அண்ணாவிடம் இருந்து நாம் என்ன பாடம் கற்றுக் கொள்வோம் என்பதை படிக்கலாமா?. யோசேப்பு அண்ணா வீட்டிலே தனியாக இருந்த பொழுது, தீமையான காரியம் செய்யும்படியான வாய்ப்பு கிடைத்தது. ஆனால் அதை வெறுத்து தள்ளிவிட்டு கர்த்தருக்கு கீழ்ப்படிந்து நடந்தார். அவர் சிறையில் இருந்தும் விடுவிக்கப்பட்டார்.

பிள்ளைகளா! நீங்களும் உங்கள் வாழ்க்கையில் எச்சரிக்கையோடு இருங்கள். தீமையான காரியங்களை செய்யும்படி உங்கள் நண்பர்களும் பேசுவார்கள், அதற்கு விலகி ஓடுங்கள். நம் எதிராளியான பிசாசு நம்மை தூண்டுவான். எப்படி என்றால் டிவி பார்க்கலாம் மொபைல் போன் பார்க்கலாம் என்று ஒவ்வொரு நாளும் தூண்டிக்கொண்டே இருப்பான். நீங்கள் எச்சரிக்கையோடு இருங்கள். இது கர்த்தருக்கு விரோதமான காரியங்கள். இவைகளுக்கு விலகியோடுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து, மேன்மைப்படுத்துவாராக. ஆமென்.

**மனப்பாட வசனம்: யாக்கோபு 4:7**

"தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்."

– சகோ. பீட்டர்

# யோனாவின் தவறும் தண்டிக்கப்படுதலும்

ஹாய் குட்டீஸ்! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

அமித்தாய் என்பவரின் மகனான யோனா என்றவருக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாகி அவர்; நீ எழுந்து போய் மகா நரகரமாகிய நினிவேக்குப் போய் அதற்கு விரோதமாய் பிரசங்கி; அவர்களுடைய அக்கிரமம் என் சமூகத்தில் வந்து எட்டினது என்றார்.

ஆனால் யோனா கர்த்தருடைய வார்த்தையின்படியே செய்யாமல் தர்ஷீசு என்கிற ஊருக்கு போகிற கப்பலேறி போய் கொண்டிருந்தார். அப்பொழுது கர்த்தர் கடலின்மேல் பெருங்காற்றை வரவிட்டார். கப்பல் கடலிலேயே உடைந்து



போய்விடுமளவுக்கு பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று. அதினால் அந்த கப்பலில் உள்ளவர்கள் தன்தன் தேவனை நோக்கி வேண்டுதல் செய்தார்கள். அதுமட்டுல்லாமல் கப்பலில் இருந்த சரக்குகளை கடலிலே எறிந்துவிட்டார்கள், ஆனால் யோனாவோ கப்பலின் கீழ்த்தட்டில் இறங்கிப்போய்ப் படுத்து ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தார். அப்பொழுது மாலுமி அவரிடத்தில் வந்து; நீயும் எழுந்து உன் கர்த்தரை நோக்கி வேண்டிக்கொள் நாம் அழிந்துபோகாதபடிக்கு ஒருவேளை அவர் நம்மை நினைத்தருளுவார் என்றான். அதுமட்டுமல்லாமல் அவர்கள் யார் நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டதென்று நாம் தெரிந்துகொள்ள சீட்டுப்போட்டு பார்ப்போம் என்று சொல்லி சீட்டுப் போட்டார்கள்; யோனாவின் பேருக்குச் சீட்டு விழுந்தது,

அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி யார் நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டதென்று நீ எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள். உன் தொழில் என்ன? தேசம் என்ன? இனம் என்ன? என்றும் கேட்டார்கள்.

நான் எபிரெயன், கடலையும் பூமியையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனாகிய கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவன் என்றும், அவருடைய சமூகத்தினின்று விலகி ஓடிப்போகிறேன் என்றும் அவர்களிடம் சொன்னான். அதைக் கேட்டவர்கள் மிகவும் பயந்து, அவனை நோக்கி நீர் ஏன் இதைச் செய்தீர்? என்றார்கள். இன்னமும் கடல் அதிகமாய்க் கொந்தளித்துக் கொண்டிருந்தபடியால் அவர்கள் அவனை நோக்கி; கடலை அமைதிப்படுத்த உனக்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார்கள். அவனோ என்னை தூக்கி கடலிலே போடுங்கள். அப்பொழுது கடல் அமைதியாகும் என்றான்.

அந்த ஜனங்கள் கர்த்தரை நோக்கி மன்னிப்பு வேண்டி, யோனா சொன்னபடியே அவனை கடலில் தூக்கிப் போட்டார்கள். கடல் தன் கொந்தளிப்பை நிறுத்தியது. யோனாவை விழுங்கும்படி கர்த்தர் கட்டளையிட்ட பெரிய மீனின் வயிற்றிலே அவன் மூன்று நாள் இரவு பகலும் இருந்தார்.

குட்டீஸ்! யோனா கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாத பாவத்தை செய்தார். ஆனாலும் அவர் பாவம் உணர்த்தப் பட்டபோது மனந்திரும்பி, அதற்குரிய தண்டனை பெற்று, மீண்டும் கர்த்தரால் காப்பாற்றப் பட்டார்.

**மனப்பாட வசனம்: நீதிமொழிகள் 16:17**

"தீமையை விட்டு விலகுவதே செம்மையானவர்களுக்குச் சமனான பாதை; தன் நடையைக் கவனித்திருக்கிறவன் தன் ஆத்துமாவைக் காக்கிறான்."

– சகோதரி. குயினி பிரதீப்

## மார்ச் மாத கேள்விகள்

**(லூக்கா சுவிசேஷ புத்தகத்தில் இருந்து)**



1. லூக்கா சுவிசேஷம் யாருக்கு எழுதப்பட்டது?
2. அபியா என்னும் ஆசரிய வகுப்பிலிருந்த ஆசாரியன் யார்?
3. கற்பனைகள் நியமங்களின்படி குற்றமற்றவர்களாய் நடந்தவர்கள் யார்?
4. கர்த்தருக்கு முன்பாக பெரியவனாயிருப்பவன் யார்?
5. ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் யார்?
6. தேவனின் இரக்கம் யாருக்கு தலைமுறை தலைமுறைக்குமுள்ளது?
7. கர்த்தருடைய கரம் யாரோடு இருந்தது?
8. சீரியாவில் யார் தேசாதிபதியாயிருந்தபோது முதலாம் குடிமதிப்பு உண்டானது?
9. பெத்லகேமின் இன்னொரு பெயர் என்ன?
10. இஸ்ரயேலில் ஆறுதல் வரக்காத்திருந்தவன் யார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-04-2026**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016.
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழின் பதில்கள்

| | |
|---|---|
| 1. மாற்கு 13:10 | 6. மாற்கு 15:25 |
| 2. மாற்கு 16:16 | 7. மாற்கு 16:9 |
| 3. மாற்கு 13:32 | 8. மாற்கு 16:16 |
| 4. மாற்கு 14:3 | 9. மாற்கு 14:54 |
| 5. மாற்கு 14:38 | 10. மாற்கு 15:43 |

### சென்ற இதழின் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| 1) | M.S. ஜேம்ஸ் | திண்டுக்கல் |
| 2) | Dr. ஆட்லின் ஆனந்தன் | மதுரை |
| 3) | Y. ஜெயசுதா பொன்செல்வி | சென்னை |
| 4) | R. சரோஜா | தென்கலம் |
| 5) | Mrs. C. வள்ளி சிதம்பரம் | கரூர் |
| 6) | A. அரவிந்த் | மதுரை |
| 7) | P. ரேச்சல் ஜானிமா | நெல்லை |
| 8) | Mrs.P. சமாதானம் பீட்டர் | விருதுநகர் |
| 9) | Mrs. ஹெப்ஸிபா தாமஸ் | படப்பை |
| 10) | A. ரோஸ்மேரி | சென்னை |
| 11) | Mrs. ஹெலன் திலக் | தூத்துக்குடி |
| 12) | Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் | தூத்துக்குடி |
| 13) | Mrs. தெல்மா ஸ்டான்லி | மதுரை |
| 14) | A. லலிதா | புதுக்கோட்டை |
| 15) | Mrs. சாந்தி வில்லியம் | புதுக்கோட்டை |
| 16) | Mrs. பெரில் பாஸ்கர் | படப்பை |
| 17) | Mrs. பிளாரன்ஸ் முத்தையா | மதுரை |
| 18) | N.ஞானசுந்தரி நாகராஜன் | பாளையங்கோட்டை |
| 19) | J. கிறிஸ்டோபர் தாஸ் | நாகர்கோயில் |
| 20) | Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் | நெல்லை |
| 21) | R. ஞானசிரோன்மணி | மதுரை |
| 22) | Mrs. பெட்ரீஷியா டேவிட் | சேலம் |
| 23) | Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் | சேலம் |
| 24) | C. வைலட் கிறிஸ்டோபர் | தளவாய்புரம் |
| 25) | J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் | மதுரை |
| 26) | N.V. அஜிதா சுபின் | மார்த்தாண்டம் |
| 27) | Mrs. சாந்தி ஜோயல் | திருச்சி |
| 28) | P.S. ருக்மணி | ஈரோடு |
| 29) | Mrs. A. இமல்டா சுந்தர்சிங் | ஈரோடு |
| 30) | A. அனிதா ஸ்டாலின் | தரங்கை |
| 31) | S. கார்த்திக் | கரூர் |
| 32) | Mrs. J. பூங்கொடி ரவி | முத்தூர் |
| 33) | Mrs. இந்திரா பாண்டி | மதுரை |
| 34) | S. பேபி சந்தோஷ்குமார் | தங்கமேடு |
| 35) | M. அன்பழகன் | தங்கமேடு |
| 36) | G. ஏஞ்சலம்மாள் | மதுரை |
| 37) | Mrs. M. ஈஸ்வரி முருகன் | கரூர் |
| 38) | M. ராஜா | கரூர் |
| 39) | A. கார்பஸ் பிலேமோன் | மதுரை |
| 40) | J. ஜான்சி | ஆனைமலை |
| 41) | S. ஜெபமணி | தென்காசி |
| 42) | T. பால்வின் | கன்னியாகுமரி |
| 43) | A. டேவிட் ஜெயசந்திரன் | மதுரை |
| 44) | S. ஷீபா ஞானவின்சா | டோனாவூர் |
| 45) | J.V. சுந்தரபாய் வில்லியம் | சேலம் |
| 46) | Mrs. பியூலா ஜேசுராஜன் | புதுவை |
| 47) | S.G. சேகர் | ராணிபேட்டை |
| 48) | Mrs. சுகுணா தமலின் | தூத்துக்குடி |
| 49) | S. டேவிட் சாந்தகுமார் | செங்கோட்டை |
| 50) | Mrs. சூரிய பிரியா | மதுரை |
| 51) | Mrs.D. குளோரி திலகவதி | சென்னை |
| 52) | S. பாக்கியராஜம் | மதுரை |
| 53) | Mr. டேவிட் ராஜ் | அனவரதநல்லூர் |
| 54) | N. ஜான் செல்லையா | மதுரை |
| 55) | Mrs. J. ஜெயராணி ஜான் | மதுரை |
| 56) | Mrs. ராணி குமரன் | கரூர் |
| 57) | Mr. தாமஸ் ராபின்சிங் | பெரம்பலூர் |
| 58) | Mrs. தேவி ராஜாசிங் | திருப்பூர் |

**தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !**

Place of Publication : 45 C/1, CHURCH LANE, CORONATION STREET, ARASARADI, MADURAI - 16.
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at THEE CLASSIC PRINTERS, 27, KAKA THOPPU, MADURAI - 1 📖 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2024 - 2026
Date of Publication : 9th March 2026
Posted at Arasaradi HPO on 10th & 11th March 2026

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்







அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/- மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்






## கைபிரதிகள்









உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH











AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers